வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.2932/ஆ5/2023, நாள். 18.07.2023

.....

பொருள் பள்ளிக் கல்வி – கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் – வேலூர் மாவட்டம் – மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுத்துதல் – விண்ணப்ப பதிவு முகாம்கள் தெரிவு செய்யப்பட்டமை – முகாம்கள் நடத்திட ஒத்துழைப்பு நல்லுமாறு – தெரிவித்தல் – தொடர்பாக

பார்வை

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காணொலி காட்சி வாயிலாக வழங்கப்பட்ட உத்திரவு நாள். 07.07.2023
2. கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட வழிகாட்டு நெறிமுறைகள்
3. வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.அ1/380/2023, நாள். 18.07.2023

.....

தமிழக அரசால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது வருகின்ற செப்டம்பர் 15–ம் தேதி முதல் செயல்படுத்தப்பட உள்ளது. வேலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செம்மையாக நடைமுறைபடுத்தும் பொருட்டு ஒவ்வொரு நியாய விலைக்கடை வாரியாக குடும்ப அட்டைகளின் அடிப்படையில் ஒவ்வொரு வட்டத்திலும் விண்ணப்பப் பதிவு மேற்கொள்ள விண்ணப்ப பதிவு முகாம்கள் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி விண்ணப்பப் பதிவு முகாம்களை கண்காணிக்க அந்தந்த வட்டத்தில் பார்வை 3–ல் காணும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள மாவட்ட அளவில் கண்காணிப்பு அலுவலர், மேற்பார்வை அலுவலர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோர் கொண்ட குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்ப பதிவு முகாம்களை தணிக்கை மேற்கொள்ளும்போது சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள் விண்ணப்ப பதிவு முகாமை 10 மற்றும் 20 நாட்களுக்கு நடத்த ஒத்துழைப்பு நல்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்பொருள் சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விண்ணப்ப பதிவு முகாம்கள் நடத்திட ஒத்துழைப்பு நல்குமாறும் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்பட சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

19/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

19.07.23

பெறுநர்.
சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது)